# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி -10 | 27-08-2003 | புதன்கிழமை | ஓசை 190



நோத்திறத்துள் கூழுவப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ படப்பிடிப்பு சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.

யாழ் சாலை, (சி-8437) கிளிநொச்சி.


# எரிக் சூல்ஹெய்ம், கனேடிய சமஷ்டிக் குழுவினர் புலிகளின் பாரிஸ் கூட்டத்தில் பங்கேற்பு

## புலிகள் — அரச திட்டவரைவுகளுக்கிடையிலான இடைவெளிகள் குறித்து சூல்ஹெய்ம் ஆராய்வு

**பாரிசில் இடம்பெற்றுவரும் விடுதலைப் புலிகளின் ஆலோசனைக் கூட்டத்தின் 4ஆவது நாளான நேற்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்மும் கனேடிய சமஷ்டிப் பேரவை உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர். இதில் எரிக் சூல்ஹெய்ம் சிறிலங்கா அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக திட்டவரைவுக்கும் விடுதலைப் புலிகள் தயாரித்து வரும் பதில் திட்டவரைவுக்கும் இடையிலான இடைவெளிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றார்.**

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ள இடைக்கால நிர்வாகத்திட்ட வரைவுக்கு வழங்கப்படவுள்ள பதில் வரைவு தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த சனிக்கிழமை முதல் பாரிசில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று மதியம் பிரான்சிற்குச்சென்ற எரிக் சூல்கெய்ம் புலிகளின் கூட்டத்தில் மாலை இணைந்து கொண்டுள்ளார். சிறிலங்கா அரசு வழங்கியுள்ள இடைக்கால நிர்வாக திட்டவரைவிற்கும் விடுதலைப் புலிகள் தயாரித்துவரும் பதில் வரைவிற்கும் இடையிலான ஒப்பீட்டுக் கருத்துக்களை ஆராய்ந்து வழங்குவதற்காகவே எரிக் சூல்கெய்ம் இக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கடந்த சில பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு சமஷ்டிப் தொடர்பான கருத்துக்களை வழங்கிய கனேடிய சமஷ்டி பேரவையின்

(08ஆம் பக்கம் பார்க்க)

பாரிஸ் ஆலோசனைக் கூட்டத்தில்...





# யாழ். மாவட்டத்திலுள்ள மக்களின் இயல்பு வாழ்வு திரும்பவில்லை

## அ.சா. நிறுவனங்களின் இணையம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மக்களின் இயல்புவாழ்க்கை இன்னும் திரும்பவில்லையென யாழ் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பான விளக்கக் கடிதங்கள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்களில் 2200 குடும்பங்கள் தற்போதும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலும் 22000 குடும்பங்கள் தமது நண்பர்கள், உறவினர்களுடனும் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் 45 ஆயிரம் குடும்பங்கள் மீளவும் குடியமர்ந்துள்ளன. ஆனால் 95 ஆயிரம்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் சமூக ரீதியான பொலிஸ் அமைப்பை ஏற்படுத்துவது பற்றி ஹக்கீம், ரணில் ஆராய்வு

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வின் ஓர் அம்சமாகவும், அதே வேளை நீண்டகாலச் செயற்திட்டமாகவும் நாடு முழுவதிலும் சமூக ரீதியான பொலிஸ் அமைப்பு ஏற்படுத்துவது குறித்து சிறிலங்காப் பிரதமரும், ரவூப் ஹக்கீமும் நேற்று ஆராய்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றைய சந்திப்பில் இது குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடனும், தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும் போது ஆராயப்பட இருப்பதாகவும் சந்திப்பின் முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## — கிழக்கு மாகாண நிலை தொடர்பாக —

# கூட்டமைப்பு - மு.கா. பிரதிநிதிகள் இன்று ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் நிலைமை தொடர்பாகவும் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பிற்கென பொலிசாரை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்தும் இன்று ஆராயப்படவுள்ளது. சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச

(08ஆம் பக்கம் பார்க்க)

# மலேசியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், ரவிகருணாநாயக்க மகிந்த சமரசிங்க ஆகியோர் இன்று மலேசியாவிற்குப் பயணமாகின்றனர். மலேசியா செல்லும் இந்த மூன்று அமைச்சர்களும் வர்த்தக பொருளாதார உறவுகளை இரு நாடுகளுக்கிடையேயும் வளர்ச்சியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட இருக்கின்றனர். இது தொடர்பாக மலேசியாவிலுள்ள முதலீட்டாளர்கள், வர்த்தகர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். மலேசியாவில் இலங்கையர்களுக்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலிடமிருந்து ஆயுதக்கொள்வனவில்லை அமெரிக்காவிடம் பெறுவதே நல்லது

## சிறிலங்கா அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

இஸ்ரேலிடமிருந்து ஆயுதக் கொள்வனவை மேற்கொள்வதில்லை யென சிறிலங்கா அரசு முடிவுசெய்துள்ளது. இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களை வாங்க அரசு திட்டமிட்டிருந்த போதிலும் கேள்விப்பத்திரம் குறித்து படைத்துறையின் உயர்மாநாட்டில் ஆராயப்பட்டு இதை இரத்துச் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் கடற்படைத்தளபதி உட்பட பலர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண இஸ்ரே

(08ஆம் பக்கம் பார்க்க)

# மேஜர் ஜோன்சன் உட்பட 29 வீர வேங்கைகளின் 8ம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிப்பு

25.08.1995 அன்று அம்பிளாந்துறை விசேட அதிரடிப்படை முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த மேஜர் ஜோன்சன் உட்பட 29 வீரவேங்கைகளின் 8ம் ஆண்டு நினைவுநாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மகளிர் படையணிப் பொறுப்பாளர் செல்வி நிலாவினி

(08ஆம் பக்கம் பார்க்க)



# பாதை தடை

(அலுவலக செய்தியாளர்)

கோணாவில் பாதையூடாகச் சந்தபுரம் செல்லும் பாதையில் உள்ள மரப்பாலம் புனரமைப்புக் காரணமாக தடை செய்யப்பட்டுள்ளது. இப்பாதையூடாக பயணிப்பவர்கள் யூனியன் குளம் பாதையினைப் பயன்படுத்துமாறும், இப்பாதையூடாக பாரஊர்திகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

## நல்லூர்த் தேர்த்திருவிழாவில்

# சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்த்திருவிழாவில் நேற்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். மேற்படி திருவிழாவை முன்னிட்டு அதிகாலை முதல் குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து நல்லூரை நோக்கி மக்கள் படையெடுக்கத் தொடங்கினர். தொடர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இவ்வாலயத்துக்குப் பக்தர்கள் காவடிகளை எடுத்து வந்தனர். பல இடங்களிலும் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டனர். இக்சன நெருக்கடியைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு திருடர்களால் எட்டு இலட்சம் பெறுமதியான தங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் வருடாந்த உதவித் திட்டத்தில் 80 வீதம் தெற்கின் அபிவிருத்திக்கு ஒதுக்கு!

## - தூதரக் உயர் அதிகாரி தோமஸ் தெரிவிப்பு

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆண்டு தோறும் 12 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி வருகிறோம். இவற்றில் 80 வீதம் தெற்கின் அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக சிரேஷ்ட உயரதிகாரி தோமஸ் ஸ்லாஸ் லாண்ட் தெரிவித்தார்.

வவுனியா குருமன்காடு கிராம அபிவிருத்தி நிறுவனப் பணிமனையில்கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில்கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது முடிவுகளை இரு தரப்பினருமே எடுக்கவேண்டும். நோர்வே எந்தத் திட்டத்தையும் திணிக்காது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பது, ஆலோசனைகள் வழங்குவது தான் நோர்வேயின் பங்களிப்பாகவுள்ளது.

எமது நாடு ஒரு சிறியநாடாகும். நாம் வல்லாதிக்கம் கொண்டவர்களல்ல. ஆனால் போர்ச் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் மத்தியஸ்தம் வகித்த நன்கு அனுபவம் கொண்ட எமக்கு ஏனைய நாடுகளில் நன்மதிப்பும் உள்ளது. ஐ.நா. அமைதிப்படையில் கூட எங்கள் நாட்டு இராணுவத்தினர் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

சில சிக்கலான விடயங்களை மிகவும் நிதானமாகக் கையாள வேண்டியுள்ளது. குறிப்பாக லண்டனில் இருந்து கலாநிதி பாலசிங்கத்தை வன்னிக்கு முதல் தடவையாக கொண்டுவருவதில் பல தடங்கல்கள் ஏற்பட்டபோது சாதுரியமாகவே அதனை மேற்கொண்டோம். சிறுவிடயமாக இருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த பணியாக அமைந்திருந்தது.

பேச்சுவார்த்தை விடயத்தில் நாங்கள் எந்த முன்மொழிவுகளையோ, பிரேரணைகளையோ வைக்கப்போவதில்லை. இரு தரப்பும் எங்களை தமக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டால் அதனைச் செய்யத் தயாராகவே உள்ளோம் என்றும் அவர் கூறினார்.

## வீதியைத் திறந்துவிடுமாறு மக்கள் கோரிக்கை

மண்டைதீவு அல்லைப்பிட்டி, வீதியைத் திறந்து விடுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மண்டைதீவி லிருந்து அல்லைப்பிட்டி. வேலணை, மண்கும்பான், குறிகட்டுவான், ஊர்காவற் றுறை, சரவணை போன்ற இடங்களுக்கு மண்டைதீவுப் பகுதியிலிருந்து செல்லும் இவ் வீதி கடற்படையினரால் மூடப்பட்டு பாதுகாப்பு வலயமாகப் பிர கடனப்படுத்தப்பட்டிருப்பதினால் இவ்வீதியை மக்கள் போக்கு வரத்துக்குப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. இதனால் மண்டை தீவிலிருந்து ஏனைய தீவுப்பகுதிகளுக்குச் செல்வோர் பண்ணை வீதிவழியாக செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் மிக நீண்டதூரப் பயணமாகவுள்ளது. (33)

---

## 10ஆம் ஆண்டின் ஆறா நினைவுகள்

மழலையாக மாவீரனாக

1974 - 07 - 01





1993 - 08 - 27

### 2 ஆம் லெப்.உத்தமன்/மருதவாணன்

(இரத்தினசிங்கம் அறிவழகன்)
ஏழாலை மேற்கு, ஏழாலை

வாழ வேண்டும் என்று நினைக்கையில் - எமை
வாழ வைக்கவென்று சென்றவனே
வாழ் நாள் முழுவதும் - உன்
வாடாத நினைவுகளுடன்.

தற்காலிக முகவரி:-
இல-04,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி

(3667) குடும்பத்தினர்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

க.பொ.த.(உ/த) 2003 பரீட்சையில் கிளி/முருகானந்த மகாவித்தியாலய கீழ்வரும் மாணவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்மைப் பெறுபேறுகளையும், சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர்.

| மாணவர் பெயர் | பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|
| **கணிதத்துறை** | | |
| 1. செல்வராஜா – ராம்ராஜ் | ABB | 1 |
| 2. அஜந்தினி – மரியதாஸ் | BBC | 2 |
| 3. சோதிலிங்கம் – ஆதவன | BBC | 3 |
| 4. மனோகரன் – சசிவர்ணன் | ACC | 4 |
| 5. பாலசுப்பிரமணியம் – வரதரூபன் | BBC | 5 |
| **கலைத்துறை** | | |
| 1. இராசையா – ரமேஸ்கரன் | ABB | 5 |
| 2. கயிலாயநாதன் – துஷ்யந்தன் | ABC | 9 |
| **வணிகத் துறை** | | |
| 1. சுந்தரலிங்கம் – பாஸ்கரன் | ABB | 23 |

இம்மாணவர்கள் அனைவரும் மாவட்டத்தில் முதன்மைப் பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும், மாவட்டத்திற்கும் பெருமைதேடித் தந்துள்ளனர். மேலும் பல வெற்றிகளைப் பெறவேண்டும் என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கிளி. முருகானந்த ம. வி.*
*முரசுமோட்டை.*

*அதிபர், ஆசிரியர்கள்.*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

(3673)

---

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கந்தையா வசந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல-770903122V)23-08-2003 அன்று புளியங்குளம் தடை முகாம் பகுதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (3672)

---

## யுனிசெவ் நிறுவன அனுசரணையின் கீழ் நடைபெறும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டப் பதிவக நடமாடும் செயலக அமர்வு

வன்னி,யுனிசெவ் நிறுவன அனுசரணையின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின்,மாவட்டப் பதிவகத்தின், கரைதுறைப்பற்று பிரதேச செயலரது பிரிவுக்கான நடமாடும் செயலக அமர்வு எதிர்வரும் 01-09-2003ம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி முன்னரங்கிலும்,02-09-2003ம் திகதி அளம்பில் புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்திலும், 03-09-2003ம் திகதி - முல்லைத்தீவு நகரம் கரைதுறைப்பற்று பிரதேச செயலரது அலுவலகத்திலும் நடை பெறவுள்ளது.

இவ் அமர்வுகளின் போது இம் மாவட்டத்தின் மக்களது இதுவரைகாலமும் பதியப்படாத பிறப்பு,இறப்பு பதிவு செய்தலும், பதிவு செய்யப்படாத திருமணங்கள் பதிவு செய்தலும் நடைபெறவுள்ளது என்பதை மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

(சி-8262)

மேலதிக மாவட்டப் பதிவாளர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

---

## தமிழீழ மாவட்ட முறைமன்று – கிளிநொச்சி

வ. இல. 155/ 003

வழக்காளி – திரு.க.சி. நடனசிகாமணி
திருமதி. சி. விமலாதேவி (விமலா)
மே/பா. இ. இராசேந்திரம்,
இல. 28, கனகபுரம்,
கிளிநொச்சி.

எதிராளி –
திரு. க. முருகமூர்த்தி,
மே/பா க. தம்பையா,
கதறிரியர்,
புட்டளை, புலோலி தெற்கு,
புலோலி.

### அறிவித்தல்

இத்துடன் பிரசுரிக்கப்படும் இடைக்காலத் தீர்வையில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இது பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் இம்மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகிறேன்.

மன்று கட்டளைப்படி
**பதிவாளர்,**
தமிழீழ மாவட்ட
நீதிமன்று,
கிளிநொச்சி.

வரைவு:
**தி.கலா,**
வழக்காளி சட்டவாளர். (3668)

---

## தமிழீழ மாவட்ட முறைமன்று - கிளிநொச்சி

**வ.இல:-** 155/003
**தன்மை:-** பணம்

**வழக்காளி:-** திரு.க.சி.நடனசிகாமணி,
திருமதி.சி.விமலாதேவி,
(விமலா)
மே/பா இ.இராசேந்திரம்
இல.28, கனகபுரம்,
கிளிநொச்சி.

**எதிராளி:-** திரு.க.முருகமூர்த்தி,
மே/பா க.தம்பையா,
கதறிரியர்,
புட்டளை, புலோலிதெற்கு,
புலோலி.

### இடைக்காலத் தீர்வை

**மேற்படி வழக்கு 2003.07.21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மன்று நீதியாளர் திரு.த.செந்தூரன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளி சட்டவாளரும் சமுகமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை முறையாகச் சேர்க்கப்பட்டும் மன்றுக்கு சமுகம் கொடுக்கா மையால் வழக்காளியை ஒருமுகமாக விளங்கியதன் அடிப்படையின் கீழ் குறித்த இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது.**

**மேற்படி வழக்கில் வழக்காளியின் உரிமைக் கோரிக்கையில் கோரியவாறு வழக்காளியால் எதிராளியின் ஆதனத்திற்கு ஈடாகக் கொடுக்கப்பட்ட பணம் ரூபா 50000/=வும் ஈடுவைக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரையான 13 வருடத்திற்கும் 30% வட்டியும் நீதிமன்ற வழக்குச் செலவும் எதிராளி வழங்குமாறு கட்டளையிட்டு இடைக்காலத் தீர்வை வழங்கப்படுகின்றது.**

**நீதியாளர்**
**[மாவட்ட நீதிமன்று]**
**கிளிநொச்சி.**

**தி.கலா**
**வழக்காளி சட்டவாளர்** (3669)

---

## ஈராண்டு நினைவில்

மண்ணில் 18 - 12 - 1951



விண்ணில் 27 - 08 - 2001

திதி 05-09-2003

அமரர்

### சின்னத்துரை திருச்செல்வம்[சந்திரன்]

ஏழாலை மத்தி

என்றும் எங்கள் திருவே!
காலன் செய்த கோரத்தால்
கணப்பொழுதில் அணைந்து போன
எங்கள் குடும்ப விளக்கே!
உங்கள் பிரிவைச் சுமந்தபடி
ஆண்டிரண்டைக் கடந்த போதும்
... பெற மறு...
...
மங்கிடாத உங்கள்
நினைவுகளால்...........

த.முகவரி:
வள்ளுவர் புரம்
விசுவமடு.

(3647)

துயர் சுமக்கும்
மனைவி-வவா
பிள்ளைகள் -
வேந்தன்,அரசி
ஆயவன்,கேசவன்,யாதவன்



மேற்குக்கரை நேப்ளஸ் நகரில் இஸ்ரேலிய படையினரின் தேடுதலில் வீடொன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதையடுத்து அந்தவீடு இடிக்கப்பட்டது. குறித்த வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டார் அவரின் மனைவியையும் மகனையும் படத்தில் காண்க.

# நோக்கத்தை நிறைவேற்றத் தேவையான படையினர் ஈராக்கில் நிலைபெற்றுள்ளனர்

## -அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர்

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்பும் அவசியம் இல்லையென அமெரிக்க பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ட்ரம்ஸ் பீல்ட் கூறியுள்ளார்.

ஈராக்கில் தமது நோக்கத்தை நிறைவேற்றத் தேவையான அளவு துருப்புக்கள் இருப்பதாக அமெரிக்க கூட்டுப்படைகளின் இணைத் தளபதிகள் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். வெளிநாட்டு யுத்தங்கள் தொடர்பாக நிபுணர்களிடம் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளின் ஊடுருவல்களும் அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்களும் அதிகரித்து வருவதாக ஈராக்கிய நிர்வாகத்திற்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரி போல் பிறேமர் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒருதொகுதி படையினரை ஈராக் அனுப்ப வலியுறுத்து

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் அரிசோனா மாநில குடியரசு செனற்றர் ஒருவர் ஈராக்கிற்கு மேலும் ஒரு படைப் பிரிவை அனுப்பவேண்டுமென நேற்று முன்தினம் கோரியுள்ளார்.

ஈராக்கின் தற்போதைய நிலை வீரத்துடனான போராட்டமென அவர் வர்ணித்துள்ளார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கதுருப்புக்கள் அடிக்கடி தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன. இதனால் நாளாந்தம் குறைந்தது இரண்டு பேராயினும் கொல்லப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதென அவர் கூறியுள்ளார்.

## வற்புறுத்தல்

செசசினிய சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படி ரஷ்யப் பிரமுகர்கள் சனாதிபதி புட்டினுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

செச்சினிய போராளித் தலைவர் அஸ் லன் மஸ்கதாவுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென இவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# அணுவாயுத சர்ச்சைக்கான பேச்சுக்கள் நம்பிக்கையீனங்களுடன் இன்று ஆரம்பம்!

## வடகொரிய குழு பெய்ஜிங் பயணம்

**பலமான நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் வடகொரிய அணுவாயுதப் பிரச்சினைக்கு முடிவு காணும் வகையிலான பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகவுள்ளன. இதற்காக வடகொரிய ராஜதந்திரிகள் குழு நேற்று வடகொரியாவிலிருந்து புறப்பட்டுச் சென்றது.**



மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகைதந்துள்ள ரஷ்ய துணை வெளிநாட்டு அமைச்சர் அலக்சாண்டர் லொஸ்கோ பெய்ஜிங் விமானநிலையத்தில் ஊடகவியலாளருக்கு பேட்டியளிக்கிறார்.

சர்ச்சைக்குரிய வடகொரிய அணுவாயுதத்திட்டம் தொடர்பான ஆறு நாடுகள் பங்கேற்கும் பேச்சுக்கள் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் பேச்சுக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை நடைபெறவுள்ளதும், இதில் வடகொரியா, தென்கொரியா, அமெரிக்கா, நாடுகள் பங்கேற்கின்றமையும் தெரிந்ததே.

இந்நிலையில் பேச்சுக்கள் சுமுகமாக நிறைவெய்தும் என்பது குறித்தும் சர்ச்சைக்குரிய விடயத்தில் இணக்கப்பாடு எட்டப்படும் என்பது குறித்தும் பலமான சந்தேகங்கள் தோன்றியுள்ளன. அத்தோடு பேச்சுக்கள் உடன்பாடு எட்டப்படா நிலையில் முறிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுக்களில் பங்கேற்கும் அமெரிக்காவும் மற்றும் அதன் ஆதரவு நாடுகளும் பேச்சுக்கள் முறிவடையக்கூடிய சாத்தியம் இருப்பதாக ஆரூடம் கூறியுள்ளன.

அணுவாயுதத் திட்டத்தை வடகொரியா முற்றாக கைவிட வேண்டும்என்பது அமெரிக்காவினதும் அதன் ஆதரவு நாடுகளினதும் நிலைப்பாடாகும்.

ஆனால் இதனை நிராகரிக்கும் வடகொரியா தமது நாட்டின் பாதுகாப்புக்கு அமெரிக்காவால் எந்த விதமான அச்சுறுத்தலும் இல்லையென எழுத்துமூலம் உறுதி வழங்கினால் மட்டுமே இதற்கு இணக்கம் தெரிவிக்கப்படும் என திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வடகொரியாவிடம் ஓரிரு அணுகுண்டுகள் இருக்கலாம் என அமெரிக்கா அஞ்சுகிறது. அவ்வாறு இருக்குமாயின் அது ஜப்பான் மற்றும் தென்கொரியாவிலுள்ள தனது படைகளுக்கு அச்சுறுத்தலாய் அமையும் என்றும் கூறுகிறது.

இந்நிலையில் இன்றைய பேச்சுக்களில் கலந்துகொள்ளும் நாடுகளில் ஒன்றான ரஷ்யா முதற்கட்ட பேச்சுக்களிலேயே முடிவொன்று எட்டப்படுமென்று எண்ணவேண்டாம் என கூறியுள்ளது. நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் வடகொரிய அணு வாயுத பிரச்சினை இன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலிபான்களை அப்புறப்படுத்த ஆப்கானில் படை நடவடிக்கை

ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படையினர் தலிபான்களுக்கு எதிராகப் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இதன்போது இருபதிற்கும் மேற்பட்ட தலிபான்கள் கைது செய்யப்பட்டதாகவும், அறுநூறுக்கும் மேற்பட்டோர் விரட்டியடிக்கப்பட்டதாகவும் அமெரிக்க படைத் தரப்பு அறிவித்துள்ளது.

ஆப்கானில் தலிபான்களின் செயற்பாடுகள் பரவலாக அதிகரிப்பதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# ரொனி பிளேயரின் பதவிக்கு ஆபத்து மேலும் அதிகரிப்பு!

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளார்.

அவரது ஆறு வருடகால பிரதமர் பதவியில் என்றுமில்லாத வாறு இந்நிலையை எதிர்நோக்கியுள்ளார் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. அணுவாயுத பரிசோதனை நிபுணர் டேவிட் கெலியின் மரணம் தொடர்பான விசாரணை பிரதமருக்கு நெருக்கடியான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவரின் மரணம் தொடர்பாக பிளேயர் சிரேஷ்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

# அணுவாயுதங்களை உருவாக்கும் திட்டம் ஈரானிடம் ஒருபோதும் கிடையாது

## வெளியுறவு அமைச்சர் சீனாவில் வலியுறுத்து

அணுவாயுதங்களை வடிவமைக்கும் திட்டமெதுவும் இல்லையென ஈரான் தெரிவித்துள்ளது.

சீனா சென்றுள்ள ஈரானிய வெளிவிவகார அமைச்சர், சனாதிபதி ஜீ. ஜின்டாவேயுடனான சந்திப்பின் போது இவ்வாறு கூறியுள்ளார்.

ஈரான் பயங்கரவாதத்தின் அச்சாணியாக விளங்குகின்ற மூன்று நாடுகளில் ஒன்றென அமெரிக்கா குற்றம்சாட்டுகின்றது. ஆனால், தமது அணுவாயுத திட்டம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவே பயன்படுத்தப்படுகின்றதென ஈரானிய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். அது வெளிப்படையானதெனவும் அவர் கூறியுள்ளார்.

# சிம்பாவ்வேயின் பொருளாதாரத் தடையை நீக்க ஆபிரிக்க நாடுகள் கூட்டாக பரிந்துரை

சிம்பாவ்வே மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டுமென ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கோரியுள்ளனர்.ள

தென்னாபிரிக்க அபிவிருத்திச் சமூக அமைப்பின் மாநாட்டின்போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிம்பாவ்வேயில் நிலவும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க அரசும், எதிர்க்கட்சிகளும் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென இவ் அமைப்பு மேலும் கூறியுள்ளது.

இங்கு நடைபெற்ற தேர்தல் மோசடி காரணமாகவும், காணி சீர்திருத்தச் சட்டத்திற்கு எதிராகவும் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் சிம்பாவ்வே மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உ.பி.முதல்வர் மாயாவதி பதவி விலகல்!

(புதுடில்லி)

உத்தரப்பிரதேச முதலமைச்சர் மாயாவதி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

மாநில ஆளுநர் விஸ்ணுகாந்த் சாஸ்திரியிடம் அவர் நேற்று தனது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.


இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தில் சட்டப்பேரவையைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று ஆளுநரிடம் தாம் வலியுறுத்தியதாகக் கூறியுள்ளார்.

மாயாவதியின் இந்தச் செயற்பாடு தமது கட்சிக்கு இழைத்த துரோகம் என்று பராதீயஜனதா தலைவர் வெங்கையா நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் ஆட்சியமைக்கும் உரிமையை சமாஜவாதிக்கட்சி கோரியுள்ளது.


அக்கட்சியின் தலைவர் முலாயம் சிங்யாதேவ், நேற்று லக்னோவில் ஆளுநரை சந்தித்து இந்த கோரிக்கையடங்கிய கடிதத்தை கையளித்துள்ளார்.

காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் சமாஜவாதிக்கட்சி ஆட்சியமைக்க உள்ளதாகக் கூறப்படுகின்றது.



பங்களாதேஷ் தலைநகரில் கண்பார்வையிழந்த அப்துல் ரஹீம் என்ற நபரும் அவரின் மனைவி சபாலியும் இசையுடன் பாடித் தமது வாழ்விற்காக நிதி சேகரிக்கின்றார்.

# மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாக முல்லையில் எழுச்சிபூர்வ விழா



வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் இருநூறாவது ஆண்டு வெற்றித்தின விழா முல்லை மாவட்டத்தில் பெரு எழுச்சியுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் கற்சிலைமடுவில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் உருவச்சிலையடியில் அந்நியரை வெற்றி கொண்டதன் இருநூறாவது வெற்றி ஆண்டை நினைவு கூரும் வகையில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சு. சின்னண்ணன் ஏற்றி வைக்க; தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரன் பண்டாரவன்னியனின் வெற்றிவாள் கொடியினை முல்லை மாவட்ட அரச அதிபரும், பண்டாரவன்னியனின் அறங்காவற்கழகத் தலைவருமான திருமதி இமெல்டா சுகுமார் ஏற்றிவைக்க, பண்டாரவன்னியனின் நினைவுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து பண்டாரவன்னியனின் கம்பீரமான உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது.

அதனை அடுத்து சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் பண்டாரவன்னியனின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் துணுக்காய் வலய உதவி கல்விப் பணிப்பாளர் ந.விஜயரட்ணம் (மணலாறு விஜயன்), முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர்.

மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் முல்லை அரச அதிபரின் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

மாலை நிகழ்வுகள் இரவு 8.30 மணியளவில் வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் அமைந்துள்ள சுந்தரலிங்கம் அரங்கில் ஆரம்பமானது.

பொதுச்சுடரேற்றல், பண்டாரவன்னியனின் நினைவுச் சுடரேற்றல், மலர்மாலை அணிவித்தல், மலர்வணக்கம் செலுத்துதல் ஆகியவற்றுடன் நடைபெற்ற நிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகளை முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கனகரட்ணம், கல்வி கழகத்தைச் சேர்ந்த கவியன்பன், முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் ஆற்றியதைத் தொடர்ந்து, அருணா செல்லதுரையின் பண்டாரவன்னியன் "குருவிச்சிநாச்சியார்" எனும் நூல் முல்லைமணி வே.சுப்பிரமணியம் தலைமையில் வெளியிடப்பட்டது. ஆய்வுரைகளை வற்றாப்பளை மகாவித்தியாலய அதிபர் ரங்கநாதன், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்கினார். நூலின் முதற்பிரதியை முல்லைமாவட்ட அரச அதிபர் பெற்றுக் கொண்டார்.

**தொகுப்பு:- அ.லோகீசன், கவியரசன்**





தொடர்ந்து பண்டார வன்னியனின் வீரவரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த நாடகங்களும் கடற்புலிப் போராளிகளின் நடன நிகழ்வுகளும் என பல்வேறுபட்ட கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து சிறப்பித்தனர்.



பண்டாரவன்னியன் அறங்காவலர் கழகத்தின் செயலாளர் சி.வேதவனம் தனது கருத்துக் களைப் பகிர்ந்து கொள்கையில் பண்டாரவன்னியன் ஒரு காலத்தின் பதிவு. தமிழ் மக்களின் போரியல் வரலாற்றில் என்றும் பிரிக்கமுடியாத அத்தியாயம். இந்த மாவீரனுடைய நினைவு தினத்தை நாங்கள் ஆண்டாண்டு தோறும் நினைவுகூர வேண்டும். பெரும் எழுச்சியாகக் கொண்டாட வேண்டும்.

1803 ஆம் ஆண்டு மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் ஆங்கிலேயர் அமைத்திருந்த கோட்டையையும் அங்கே அமைந்திருந்த அரச விடுதியையும் தாக்கி ஒரு பெரும் சாதனையைப் படைத்து அங்கிருந்து ஆங்கிலேயரின் மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றினான் என்ற ஒரு வீர வரலாற்றைக் காண்கின்றோம்.

ஆனால் இன்று எமது தேசியத் தலைவர் முல்லைத்தீவுத் தளத்தின் மீது ஓயாத அலைகள்-01 என்ற பெரும் தாக்குதலை நடத்தி இரண்டு ஆட்லறிப் பீரங்கிகளைக் கைப்பற்றிய வீரவரலாற்றை அதேமுல்லை நகரில் நாம் காண்கின்றோம்.


இந்த வன்னி மண்ணின் வீரனாக நாயகனாக அடங்காப் பற்றின் காவலனாகத் திகழ்ந்து எமக்கெல்லாம் ஒரு முன்னோடி வீரனாகத் திகழ்ந்த இந்த வீரனின் நிகழ்வை நாம் இன்று நெஞ்சில் நிறுத்திக் கொண்டாடுவதில் பெருமிதம் அடைகிறோம் என்றார்.

தொடர்ந்து பண்டாரவன்னியன் அறங்காவலர் கழகத் தலைவரும் முல்லை அரச அதிபருமான

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் பிரச்சாரம் தென்னிலங்கையில் ஆரம்பம்

தென்னிலங்கையில் தேர்தல் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இப்பொழுது தென்படத் தொடங்கியுள்ளன. எந்தவொரு தேர்தல் வந்தாலும் தயாராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தார். அதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணியும் தேர்தல் ஒன்றுக்கான தீவிர ஏற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டது எனத் தகவல்கள் கூறு




கின்றன. இந்த வாரம் சிறிலங்காவின் அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராக ஆரம்பித்துள்ளன.

இங்கு ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அதிலும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி தனது 18 மாதகால சாதனையை முதலீடாக வைக்கத் தயாராகி வருகிறது. இதன் முதற்படியாகக் கட்சி அமைப்பாளர் உறுப்பினர்களுக்குச் சமாதான முயற்சி குறித்து விளக்கும் நடவடிக்கைக்கு உயர் குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

இந்தச் சமாதான நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள/ஏற்படப்போகின்ற பொருளாதார வளர்ச்சி அதன் பிரச்சாரத்தின் தொனிப்பொருளாக இருக்கும். ஏனெனில் அதுவே சமாதானத்தால் கிடைத்த அறுவடையாக ஐக்கிய தேசிய முன்னணிக்கு உள்ளது. சமாதான நகர்வுகளின் முன்னேற்றத்தில்தான் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் வாழ்க்கை இருக்கிறது என்பது அதற்கும் எதிர்க் கட்சிகளுக்கும் நன்கே தெரியும். எனவே அதனைத் தக்கவைத்துக் கொள்ள ஐக்கிய தேசிய முன்னணியும் முறியடிக்க ஏனைய எதிர்க்கட்சிகளும் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

ஆளும் கட்சி தான் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைவு சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையைப் போக்கி மீண்டும் பேச்சுவார்த்தைக்குச் செல்ல உதவும் என நம்புகிறது. புலிகள் நடத்திவரும் பாரீஸ் மாநாடு அதற்கு அந்த நம்பிக்கையை ஊட்டி இருக்கிறது.

ஆனால், நாட்டின் ஒரு பகுதியைத் தாரைவார்த்துச் சமாதானமா? என்று எதிர்க்கட்சிகளும் இனவாதிகளும் எழுப்பும் கேள்வி அதற்குச் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. அதாவது நாட்டைத் தாரைவார்ப்பது கஷ்டமில்லாவிடினும் கடந்த காலத்தில் இடம் பெற்ற சுமுகமான முறையிலான பேச்சுவார்த்தைகளும் புலிகளின் ஒத்துழைப்பும் அரசாங்கம் புலிகளுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்து வருகிறதா? அல்லது கேட்பதையெல்லாம் கொடுக்கிறதா? என்ற கேள்விகளைச் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம் ஆளும் கட்சிக்கு உண்டு.

இதன் காரணமாகப் பேச்சுவார்த்தை மேசைகள் இனிமேல் இலகுவானதாக இராது. கடினமான வார்த்தைப் பிரயோகங்கள், பணிப்போர்கள் எல்லாம் இருக்கும் என அரசாங்கம் 'பேச்சுவார்த்தைக் குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர் மிலிந்தமொறகொட கூறியிருக்கிறார். இதன் மூலம் அரசாங்கம் இறுக்கமான நிலைப்பாட்டைக் காட்டி வருகிறது என நிலை நாட்டப்பார்க்கிறது.

இது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தானே நாட்டின் நலனில் அக்கறையுள்ள ஒரேயொரு தலைவர் எனக் காட்டுவதில் தீவிர அக்கறை காட்டி வருகிறார். அதிலும் பௌத்த தீவிரவாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தீவிர அக்கறை கொண்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயல்கிறார்.

சமாதான முயற்சிகள் தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை முறியடிக்கத் தீவிர நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது சிங்கள இனவாதிகளின் கருத்தாகும். வடக்குக் கிழக்கைப் பிரிக்க வேண்டும், இடைக்கால நிர்வாக சபையொன்று அமையவிடாது தடுக்க வேண்டும், இன்றைய சமாதான முயற்சிகளை முறியடிக்க வேண்டும், நோர்வே மத்தியஸ்தத்துக்கு முடிவு கட்ட வேண்டும் என இனவாதிகள் கோரிவருகின்றனர்.

* ஆனால், இவற்றைச் செய்வதற்கு சனாதிபதி சந்திரிகா விரும்பம் கொண்டிருப்பினும் சர்வதேச அனுசரணையுடனான ஒரு சமாதான முயற்சியை முறியடிக்கும் துணிவு அவருக்கு இல்லை. இதன் காரணமாக அவர் வடக்குக் கிழக்குப் பிரிப்பு பற்றி ஆலோசிப்பதாகக் கூறுவதுடன் சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்தத் தேவையான வேலைகளை அவர் படிப்படியாக மேற்கொண்டு வருகிறார். அதாவது வடக்குக் கிழக்குப் பிரிப்பு, குரங்குபாஞ்சான், கிழக்கு மாகாண வன்முறைகள் தொடர்பாக வெளிப்படையாகச் சில நகர்வுகளை எடுத்து வருகையில் இவ்விவகாரத்தில் இந்தியாவை இழுத்து விடுவது உள்ளிட்ட சில நடவடிக்கைகளை அவர் இரகசியமாகவும் செய்து வருகின்றார்.

இதேவேளை ஜே.வி.பி.யுடன் கூட்டு வைப்பதற்கான நடவடிக்கை மீண்டும் தீவிரமடைவதாகவே தோன்றுகின்றது. இன்று சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள சந்திப்பில் தீர்க்கமான விடயங்களில் முடிவுகள் எடுக்கப்படலாம் என எதிர்பார்ப்பு உள்ளது. அவ்வாறு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டு கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்குமாயின் அது தேர்தலொன்று விரைவில் வரப்போகின்றது என்பதையே வெளிக்காட்டும்.

இன்றைய கூட்டத்தில் கூட்டணி அமைப்பதற்கான காலக்கெடு ஒன்றைக் கோர ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. தேர்தல் ஒன்று அண்மிக்கின்றது என்பதை ஜே.வி.பி உணர்ந்து கொண்டதால் தான் இவ்வாறு வலியுறுத்துவதாக எடுத்துக் கொள்ள முடியும். அடுத்து இரண்டு விடயங்களில் ஜே.வி.பி திட்டவட்டமான முடிவை சனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கிறது. ஒன்று சமாதான முயற்சிகள் இரண்டு நோர்வேயின் பங்களிப்பு இந்த இரண்டு விடயங்களையுமே முற்றாக நிராகரிக்கும் ஜே.வி.பி இதில் விட்டுக் கொடுப்புச் செய்யத் தயாராக இல்லை. ஏனெனில் அது தனது தேர்தல் பிரச்சாரமாக அவற்றையே பயன்படுத்தவுள்ளது. எனவே இவ்வாறான முடிவுக்கு சந்திரிகா குமாரதுங்க நெருக்கமாகவராவிட்டால்

**வேலவன்**

கூட்டணி ஏற்படுவது சந்தேகமே.

ஜே.வி.பி தனது தேர்தல் பிரச்சாரத்தை நேற்று முன்தினம் காலியில் ஆரம்பித்து விட்டது என்றே கூறவேண்டும். இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான பாத யாத்திரை என அது கூறினாலும் தனது பலமான கோட்டையான

(5ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் படுகொலைகள், கடத்தல்களுக்கு புலிகளைத் தவிர வேறுசக்திகள் இல்லையா?

முஸ்லிம்களுக்கும் - தமிழர்களுக்கும் இடையில் வரலாற்று ரீதியிலான சகோதரத்துவ உறவொன்று இருந்துவந்ததென்பதை எவரும் நிராகரித்துவிட முடியாது. ஆனால், கடந்த இரு தசாப்த காலத்தில் இரு தரப்பினர் இடையிலும் பல மனம் வருந்தத்தக்க சம்பவங்கள் இடம்பெற்றன என்பதும் மறுக்கப்பட முடியாததொன்றாகவே உள்ளது.

ஆனால், அத்தகைய மனக் கசப்புக்களைப் போக்கும் வகையில் தமிழர் தரப்பில் இருந்து தற்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்களுடனான மனக்கசப்பு, அவர்களின் சந்தேகம், ஐயப்பாடுகள் என்பனவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில், யுத்த நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்கள் தொடர்பான தனது நல்லெண்ணத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த வகையில், வடக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு ஒத்துழைப்பை வழங்கி வருவதோடு, கிழக்கில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

குறிப்பாக, கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் விவசாய நிலங்களை ஒப்படைத்தல், அவர்கள் விவசாயம் செய்ய அனுமதி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் புலிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இது முஸ்லிம் தரப்பில் கூட எதிர்பார்க்கப்படாததொன்றாகவே கருதப்படுகின்றது.

இது மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசிடம் வடக்கு-கிழக்கிற்கெனக் கோரி நிற்கும் இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம் மக்களுக்கு உரிய இடமளிக்கப்படும் எனவும், இது தொடர்பாக முஸ்லிம் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக உள்ளதெனவும் வெளிப்படையாக அறிவித்தும் உள்ளனர். இடைக்கால நிர்வாக சபை தொடர்பான தமது மாற்றுத் திட்டத்திற்கான இறுதி வடிவம் கொடுப்பதற்கான சட்ட ஆலோசகர்களின் பாரிஸ் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்வதற்கு முன்பாகக்கூட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது வடக்கு-கிழக்கை வாழ்விடமாகக் கொண்ட அனைத்து மக்களுக்குமானது என்று குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஆனால், விடுதலைப் புலிகள் இவ்வாறாக, நல்லெண்ணத்தைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றபோதும் முஸ்லிம் தலைமைகள் இது குறித்து பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. முஸ்லிம் - தமிழ் மக்களிடையேயான சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் என்பனவற்றை பதற்றங்களையும், வன்முறைகளையும் அதிகரிப்பதற்கான காரணமாக்கி அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேட முற்பட்டு நிற்கின்றனர்.

இதற்கு இன்று கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள், வன்முறைகள், பதற்றம் என்பனவற்றைச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது, முஸ்லிம்கள் கொல்லப்படுதல், கடத்தப்படுதல், காணாமறபோதல் என்பனவற்றிற்கு தமிழர் மீது குறிப்பாக விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டுவது வழமையானதொன்றாகி விட்டது. இதன் மூலம் பதற்றத்தை அதிகரித்து வன்முறையைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேட அவை முற்பட்டு நிற்கின்றன.

ஆனால், இக்கொலைகள் தொடர்பாகவோ அன்றி கடத்தல்கள், காணாமற்போதல் தொடர்பாகவோ விடுதலைப்புலிகளைத் தொடர்புபடுத்திச் சிந்திப்பதற்கு அப்பால் வேறு கோணங்களில் சிந்திப்பதற்கு பல வலுவான காரணிகள் உண்டு. ஆயினும், அவ்வாறு முஸ்லிம் தலைமைகள் சிந்திப்பதாக இல்லை. அவ்வாறு சிந்திப்பது தமது அரசியலுக்குப் பாதகமாகிவிடும் என அவை நம்புகின்றன.

முதலில் இக்கொலைகள் அன்றிக் கடத்தல்கள், காணாமற்போதல் என்பன முற்றிலுமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடைபெற்று வருகின்றன. இப்பகுதிகளின் பாதுகாப்புப் பொறுப்பு முற்றிலுமாக சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பிடமே உள்ளது. அது மட்டுமல்ல, அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் சில நூற்றுக்கு நூறு வீதம் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களிலேயே இடம்பெற்றுள்ளன. அதாவது, முஸ்லிம்கள் தவிர்ந்த ஏனையவர்கள் நடமாடவோ அன்றித் தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டுத் தப்பித்து வருவதற்கோ வாய்ப்பான பகுதிகள் அல்ல.

அடுத்ததாக இன்று முஸ்லிம் இடையே பல்வேறு பெயர்களில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் இயங்கி வருவதாக சிறிலங்கா புலனாய்வுத்துறைத் தவகல்கள் தெரிவிக்கின்றன. அக்குழுக்கள், ஏ.கே. ரக துப்பாக்கிகள் போன்றவற்றில் சூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அப்புலனாய்வுத்துறைத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, இவ் ஆயுதக் குழுக்கள் தொடர்பான தகவல்களை சிறிலங்கா உள்துறை அமைச்சும் ஊர்ஜிதம் செய்துள்ளது. மேலும் இவ் ஆயுதக்குழுக்கள் குறித்து ஆராயவென இரண்டு உயர் மட்ட பொலிஸ் புலனாய்வுக் குழுக்களை உள்துறை அமைச்சு கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பிவைத்தும் உள்ளது.

அத்தோடு, இவ்வாறாக, ஆயுதக்குழுக்கள் இயங்கத் தொடங்கியுள்ளமையை முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கூற்றுக்களும் ஊர்ஜிதம் செய்வதாகவே உள்ளன. தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட பல முன்னணி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களும் சரி, அவர்களுக்குப் போட்டியான முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களும் சரி தெரிவித்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்க தாகும்.

இந்த வகையில் பார்க்கையில், முஸ்லிம் இளைஞர்கள் காணாமற்போதல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் என்பன தனியாக தமிழர் தரப்பினருடனோ அன்றிப் புலிகளுடனோ தொடர்புபடுத்திச் சிந்திக்கப் படக் கூடியதொன்றல்ல. அதாவது, முஸ்லிம் ஆயுதக்குழுக்களுடன் இணைதல், ஆயுதக் குழுக்களினால் கடத்தப்படுதல், ஆயுதக் குழுக்கள் இடையிலான போட்டிகளினால் படுகொலை செய்யப்படுதல் என்பனவற்றுடன் சேர்த்தும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இதேசமயம், முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் இடையே போட்டிகளும் உட்பூசல்களும் இருக்கமாட்டாது எனவும் கூறுவதற்கில்லை. வெளியாகியுள்ள தகவல்களின்படி, முகாய் தீன், ஜிகாத், அல்-ஹைதா, ஒசாமா என்ற ரீதியில் பல ஆயுதக்குழுக்கள் உருவாகியுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஆகையினால் இக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு அரசியல் பின்னணியோ அன்றி வெவ்வேறான கொள்கைகளோ அன்றி தலைமைத்துவத்தில் போட்டியோ இருத்தல் வேண்டும். ஆகையினால், கடத்தல், படுகொலைகள் இடம்பெறாது என ஏவருமே கூறிவிட முடியாது.

> முஸ்லிம்கள் கொல்லப்படுதல், கடத்தப்படுதல், காணாமற் போதல் என்பனவற்றிற்கு தமிழர் மீது குறிப்பாக விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டுவது வழமையானதொன்றாகிவிட்டது. இதன் மூலம் பதற்றத்தை அதிகரித்து, வன்முறையைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேட அவை முற்பட்டு நிற்கின்றன. ஆனால், இக்கொலைகள் தொடர்பாகவோ அன்றி கடத்தல்கள், காணாமற்போதல் தொடர்பாகவோ விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்திச் சிந்திப்பதற்கு அப்பால் வேறு கோணங்களில் சிந்திப்பதற்கு பல வலுவான காரணிகள் உண்டு. ஆயினும், அவ்வாறு முஸ்லிம் தலைமைகள் சிந்திப்பதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, அண்மையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சிறிலங்காப் பொலிசார், இறந்தவர்களுக்கும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையில் தொடர்புகள் எவையும் உண்டா? என்ற ரீதியில் விசாரணைகளைத் திசை திருப்பியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதற்கு, இவர்கள் கொலை செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்த பெரும் தொகைப் பணம் காணாமற்போனது எவ்வாறு? பெருந்தொகைப் பணத்தை அவர்கள் ஏன் எடுத்துச் சென்றார்கள்? என்பது போன்ற கேள்விகளே பொலிசார் தமது விசாரணைகளை பாதாள உலகக் கோஷ்டிகளுடன் தொடர்புபடுத்தி மேற்கொள்வதற்குக் காரணமாகும்.

இது ஒருபுறம் இருக்க, சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் இக்கொலைகளில் ஈடுபடுவதற்கும் போதியளவிலான ஆதாரங்களும், காரணிகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, சமாதானத்திற்கு விரோதமான தேசவிரோதக் குழுக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே ஆயுதங்களுடன் உள்ளன. இவை தமிழ்- முஸ்லிம்கள் இடையே பதற்றத்தைத் தோற்றுவிக்கும் வகையில் இப்படுகொலைகளில் ஈடுபட சந்தர்ப்பமுண்டு.

அவ்வாறு இல்லாதுவிடில், முஸ்லிம்களுடன் இரகசிய ஆயுத விற்பனையில் ஈடுபடும் 'வரதர் அணி' போன்ற ஆயுதக் குழுக்களுக்கும், இரகசியமாக ஆயுதங்களை வாங்க முற்படும் முஸ்லிம் குழுக்களுக்கும் இடையேயான பேரங்கள், மோசடிகள் என்பனவற்றின் காரணமாக இப்படுகொலைகள் இடம்பெறவும், கடத்தல்கள், காணாமற்போதல் போன்றவை இடம்பெறவும் வாய்ப்புக்கள் உண்டு.

இதேவேளை, இவற்றை நிரூபிப்பது போன்று கடந்த கால சம்பவங்கள் சிலவும் நிகழ்ந்துள்ளன. அதாவது, முஸ்லிம் காங்கிரஸ் சில சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டிய போதும் இறுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அவற்றிற்கும் இடையில் எதுவித தொடர்பும் இல்லை என்பது தெரியவந்துள்ளது. எடுத்துக்காட்டாகக் கடந்த ஆண்டில் அக்கரைப்பற்றில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்ட முடியும்.

இதை ஒத்ததொரு நிலையே தற்பொழுது சம்மாந்துறையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும், சாய்ந்தமருதைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் காணாமற்போனமை தொடர்பான விசாரணைகளின் போக்கில் இருந்து அனுமானிக்கக் கூடியதாக உள்ளது. இதில் குறிப்பாக, சாய்ந்தமருது இளைஞர்கள் காணாமற்போன விவகாரம் தொடர்பாக இரு முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆகையினால், கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது நிகழும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான சம்பவங்களுடன் ஆதாரமற்ற விதத்தில் விடுதலைப்புலிகளைச் சம்பந்தப்படுத்துவது பொறுப்புணர்வற்றதொரு செயலாகும்.

இது தமிழ் மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல, முஸ்லிம் மக்களையும் தவறான பாதையில் இட்டுச் செல்வதாகவே அமைந்துவிடக் கூடியதொன்றாகும்.

இன்று முஸ்லிம் தலைமைகள் தமிழருக்கு விரோதமாகச் செய்யும் பிரச்சினைகள் கடந்தகாலத்தில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் தமது அதிகாரத்திற்கான போட்டி காரணமாக எவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதப் பிரச்சாரத்தில் முனைப்புக் காட்டினவோ அதை ஒத்த வகையிலேயே காணப்படுவதாய் உள்ளது. தமிழ் மக்களுக்கு விரோதமான பிரச்சாரமும், வன்முறையும் தமது வாக்கு வங்கிகள் பலப்படும் என அவை முனைப்புடன் செயற்படுவதாகவே தெரிகின்றது.

ஆனால், வரலாற்று ரீதியாக சகோதரத்துவத்துடன் தமிழர் தாயக நிலப்பரப்பில் இணைந்து வாழ்ந்து வந்த சமூகங்களுக்கிடையில் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதற்காக முரண்பாடுகளையும், மோதல்களையும் உருவாக்கும் வகையில் செயற்படுவது இரு தரப்பினருக்கும் அனுகூலமானதல்ல. சிங்களப் பேரினவாத சக்திகளின் ஒடுக்குமுறைக்கு வாய்ப்பளிப்பதாக இருக்கும்.

**- ஜெயராஜ்**

---

## மாவீரன்......

இமெல்டா சுகுமார் தனது உரையில்,

தமிழர்களாகப் பிறந்த எமக்கு வீரமும், பண்பும் மறத் தன்மையும் ஒரு புதிய விடயமல்ல. அது எமக்கு மாவீரன் பண்டார வன்னியன் காலத்தில் இருந்தே கிடைத்திருக்கிறது எம்மில் கலந்திருக்கிறது.

மாவீரன் பண்டாரவன்னியனின் வீரவரலாற்றின் பின்னர் அவனது வழியில் நாம்கூட யாருக்கும் அடிபணிந்து வாழமாட்டோம் என்ற வகையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகத் தலைவர் பிரபாகரனின் வழியில் ஆயிரக் கணக்கான போராளிகள் அணிவகுத்து நிற்கிறார்கள். இவர்களின் தியாகத்தால் நாம் வீரமுள்ள மறத்தமிழர் என்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம் என்றார்.

மணலாறு விஜயன் உரையாற்றுகையில், மாவீரன்பண்டார வன்னியன் வீரவரலாறு 200 ஆண்டுகளைத் தொட்டு நிற்கின்றது.

மாவீரன் பண்டாரவன்னியன் மாவீரன் ஆகிவிட்டான் என்று நாம் ஒரு போதும் எண்ணவில்லை. ஏனென்றால்எமது மண்ணோடு தொட்டு நிற்கின்ற வீரவரலாறுகளில் அவன் வாழ்கிறான். எம் அனைவரின் உள்ளும் அவன் ஆத்மா புகுந்திருக்கிறது என்றார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தெரிவிக்கையில்,

வீரம் செறிந்த வன்னியின் இறுதி மன்னன் என்ற பெருமையை மாவீரன் பண்டாரவன்னியன் பெற்று நிற்கின்ற அதேவேளை, எமது விடுதலைப் போராட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய அளவுக்கு ஒரு இறைமைமிக்க ஒரு திறமை மிக்க ஆட்சியை படைபலத்தோடு ஆண்டுவந்த மன்னனாகப் பண்டாரவன்னியனின் வரலாறு அமைகிறது.

மாவீரன் பண்டாரவன்னியன் வெள்ளையர்களால் தோற்கடிக்கப்பட்ட நாளையே நாம் இதுவரை காலமும் சிறப்பாகக் கொண்டாடி வந்தோம். ஆனால் இன்று பண்டாரவன்னியன் ஆங்கிலேயர்கள் முல்லைத்தீவில் அமைத்திருந்த பெரும் கோட்டையை வெற்றி கொண்டு பெருமளவு படைகளைக் கொன்று பீரங்கிகளைக் கைப்பற்றிய அவனது வீரத்தின் வெளிப்பாட்டை வெளிக்காட்டும் வகையில் 1803 ஆம் ஆண்டு முல்லை கோட்டையை வெற்றி கொண்ட இன்றைய தினம் பண்டாரவன்னியனை நினைவு கூருகின்றோம்.

பண்டாரவன்னியன் அன்று தமது உரிமையைப் பாதுகாக்கப் போராடினான். இன்று நாம் இழந்துவிட்ட எமது உரிமையைப் பெறுவதற்காகப் போராடுகின்றோம் என்றார்.

## சமாதான.....

காலியில் ஆரம்பித்துத் தென்பகுதியூடாக நாளை கொழும்பைப் பாதயாத்திரை வந்தடையவுள்ளது. இப்பகுதி ஜே.வி.பியின் ஆதரவுத் தளங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பாதயாத்திரை மூலம் தனது பலத்தை வெளிப்படுத்த ஜே.வி.பி முயல்கிறது.

இதேவேளை இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான தீவிர பரப்புரையை வடக்குக் கிழக்கிலுள்ள சிங்களவர்களின் பிரதேசமுட்பட அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளவுள்ளது இதற்கென 1000 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஜே.வி.பி வெளிநாடுகளிலுள்ள சிங்களவர்களிடமிருந்து நிதி திரட்டும் நடவடிக்கையொன்றையும் ஆரம்பித்துள்ளது.

சிஹல உறுமயவும் தனது பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டது அதன் முக்கிய குறியாக வடக்குக் கிழக்கிலுள்ள சிங்களக் கிராமங்களும் எல்லைப்புறக் கிராமங்களும் இருக்கினறன.

பொதுசன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இடதுசாரிக் கட்சிகள் தமது நிலையை மீள் பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளன. தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா? என ஆலோசனையில் இறங்கியுள்ளன. குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி இதனை வெளிப்படை யாகவே கூறிவிட்டது. ஜே.வி.பியுடனான கூட்டுக் குறித்த பேச்சுவார்த்தைகளின் முடிவிலேயே இக்கட்சிகள் அதனைத் தீர்மானிக்கக் கூடும்.

தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சின்னத்தில் போட்டியிடுவது என்றால் புதியதொரு தேர்தல் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது.

இவ்வாறான நிலையில் முதலில் வரப்போகின்ற தேர்தல் எது? என்ற கேள்வி எழுகின்றது. ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாகாணசபைத் தேர்தலை இலக்கு வைத்தே செயற்பட்டு வருகின்றன. வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் வேலைகளும் இடம்பெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாணசபைகள் சிலவற்றுக்கான தேர்தல்களை எதிர் பார்க்கலாம்.

# 6ஆம் அகவை நிறைவு நாளில் பூரித்து நிற்கும்
# டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை
# புதுக்குடியிருப்பு

## வளர்ந்துவந்தபாதையில் எண்ணற்ற சேவைகள் சாதனைகள்



- மண்ணின் மைந்தர்களான மருத்துவர்கள், உதவி மருத்துவர்களினால் வழங்கப்பட்டுவரும் 24 மணிநேர வெளிநோயாளர், உள்நோயாளர் சிகிச்சைகள்.
- அனுபவம் வாய்ந்த வைத்திய நிபுணர்களினால் வழங்கப்படும் மகப்பேற்றுச்சிகிச்சை, சத்திரசிகிச்சை, பொது மருத்துவம், குழந்தைகள்மருத்துவம்
- சகல வசதிகளையும் கொண்ட இரு சத்திரசிகிச்சைக் கூடங்கள் (OPERATION ROOMS)
- முழுமையான வசதிகளைக்கொண்ட பாதுகாப்பான மயக்கும் பகுதி (ANAESTHESIA)
- உயிர்த்தொழிற்பாட்டினை தொடர்ந்து கண்காணித்து தரவுகளை உடனுக்குடன் வழங்கும் கருவிகள் (VITAL SIGNS MONITORS)



- ஒலி அலைப் பிரதிபலிப்புக்கருவிகள் (ULTRASONIC SCANNERS)
- நவீன மருத்துவ உலகின் வளர்ச்சிக்கு ஏற்ற புதிய கருவிகளைக் கொண்ட மருத்துவ ஆய்வுகூடம் (MEDICAL LABORATORY)
- மிக நவீன வசதிகளை உடைய பற்சிகிச்சைப் பகுதி (COMPACTMOBILE DENTAL UNIT)
- அண்மைக்கால கண்டுபிடிப்புக்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய மருத்துகளினையும் கொண்ட 24 மணி நேர சேவையுடன் கூடிய மருந்தகம்.மாதந்தோறும் யாழ். பொது மருத்துவமனையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வருகை தரும் நிபுணர்களைக்கொண்டு வழங்கப்படும் இலவச or பகுதிக்கட்டண மருத்துவ சத்திரசிகிச்சை முகாம்கள்.
- இதுவரை இவ்வாறான முப்பதிற்கு மேற்பட்ட சிகிச்சை முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதில் பயனடைந்த மக்கள் பல்லாயிரம்.



- எம் மக்களின் நலன் கருதி எமது சேவைகளில் விரிவாக்க எண்ணியுள்ளவை ஏராளம்! அவற்றில் சில விரைவில்.

தீவிர சிகிச்சைப் பிரிவு (INTENSIVE CARE UNIT)
கதிர் வீச்சுப்படப்பிடிப்பு கருவிகள் (IMAGING UNIT)
இருதய நோய் ஆய்வுப்பகுதி (CORONARY CARE UNIT)
இன்னும் பல.



6ஆம் அகவையினை நிறைவு செய்யும் எமது மருத்துவமனையின் சேவைகள் மேலும் விரிவடைந்து அனைத்து மக்களும் பயன்பெற வாழ்த்தி நிற்கும்
பணிப்பாளர்கள்,
மருத்துவர்கள்,
பணியாளர்கள்.

### வாழ்த்திநிற்கும் சகோதர நிறுவனங்கள்

உற்ற விடத்தில்
உயிர் வழங்கும் தன்மையாய்
ஆற்றிடும் உம் சேவையினை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த (தனியார்) மருத்துவமனை,
கிளிநொச்சி.

சீரிய வாழ்வு பெற
சிறந்த நல்ல சேவையாற்றி
பாரிய புகழை ஈட்டும்
பணிதனை வாழ்த்துகின்றோம்.

மருந்துபால்மா (தனியார் வரைவுள்ளது)
கிளிநொச்சி.
புதுக்குடியிருப்பு.
முள்ளியவளை.
மல்லாவி.
இலுப்பைக்கடவை.
முழங்காவில்.
விசுவமடு.

நாற்றிசையும் உன் பணியை
நாட்டி நிற்கும் பாங்குதனை
ஏற்றியே போற்றுகின்றோம்
நீள்க நும் நேர் பணிகள்.

கண்ணன்
மருத்துவமனை,
தேவிபுரம்.

[பி-2296]

# டாக்டர் பொன்னம்பலம்
# ஞாபகார்த்த மருத்துவமனை



## சிந்தனைக்கு...

சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-08-2003

# காலத்தின் தேவை!

சிறிலங்கா அரசின் சமாதானத்திற்கான நம்பிக்கைகள் குறித்து வெளிநாட்டு அரசாங்கங்களும், முதலீட்டாளர்களும் தெளிவுபடுத்தும் பணியில் மலேசியாவிற்கான சிறிலங்கா தூதுவர் ஈடுபட்டுள்ளமையானது சிறிலங்கா அரசைப் பொறுத்து இன்று கட்டாயத் தேவையொன்றாகியுள்ளது.

ஏனெனில், சமாதான முயற்சிகள் குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் பேசி வருகின்றபோதும், அதில் காணப்படும் முன்னேற்றமானது மிகவும் அற்பசொற்பமானதொன்றாகவே உள்ளது. சிலவேளைகளில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுமா என்ற சந்தேகத்தினைக்கூட ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமானதாகவே உள்ளது.

புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகி 18 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும், உடன்பாட்டு விதிகள் பல நிறைவேற்றப்படாமையினால் அவநம்பிக்கைகள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. அதேசமயம், இடை நிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை வளர்ச்சி கண்டு வருகின்ற போதும், இன்னமும் அது குறித்த உறுதியான முடிவுகள் எவையும் எட்டப்பட்டதற்கான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

ஆனால், அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கையை வளர்த்தெடுக்க முற்பட்டு நிற்கின்றபோதும், தென்னிலங்கையிலும், கிழக்கு மாகாணத்திலும் காணப்படும் அரசியற்சூழ்நிலைகள் சமாதானம் குறித்த அவநம்பிக்கையை எவருக்குமே ஏற்படுத்தக்கூடிய வலுமிக்கவையாகவே உள்ளன.

முதலாவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சமாதான முயற்சிகளுக்கு - குறிப்பாக ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்குத் தமது கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிப்படுத்துபவராகவே இருந்து வருகின்றார்.

இதற்காக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது தொடர்ச்சியாக தமது எதிர்ப்பைக் காட்டிவரும் சனாதிபதி, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்படும் உடன்பாட்டினைத் தான் ஏற்கப் போவதில்லை எனப் பகிரங்கமாகவே அறிவிப்புச் செய்துள்ளார். ஆகையினால், இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக அவர் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

அடுத்ததாக, இடைக்கால நிர்வாக சபையை மட்டுமல்ல, விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகள் அனைத்தையுமே ஜே.வி.பி. எதிர்க்கின்றது. இதற்கென சிறிலங்காவில் கிராமம் கிராமமாக ஆயிரம் கூட்டங்களை நடத்துவதற்கு அக்கட்சி தீர்மானித்து - அதனைச் செயற்படுத்தி வருவதோடு, இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக காலியில் இருந்து கொழும்பு நோக்கி கிராமங்கள் ஊடாகப் பாதயாத்திரை ஒன்றையும் அது ஆரம்பித்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் அரசியல் கூட்டு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதில் தீவிரம் காட்டும் ஜே.வி.பி. இதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கான எதிர்ப்பைப் பலப்படுத்தவும், தீவிரப்படுத்தவும் முனைவதோடு, ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்றை மேற்கொள்வதற்கான முயற்சியிலும் அதீத ஈடுபாடு காட்டி வருகின்றது. இதற்கு சனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அது வலியுறுத்தத் தயாராகவே உள்ளது.

சமாதான நடவடிக்கைகளுக்குத் தெற்கில் இத்தகைய எதிர்ப்புக்கள் காணப்படுகையில், கிழக்கில்கூட சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் தோற்றம் பெற்றுவருவதாகவே கருத இடமுண்டு. கிழக்கில் பதற்றத்தையும், இனமோதல்களையும் தோற்றுவிக்க சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் முற்பட்டு நிற்கின்ற அதேவேளை, சில அரசியல் சக்திகள்கூட இதற்கு அனுகூலமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவே அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆகையினால், சமாதான முயற்சிகள் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளன என்பதும், சமாதானத்தின் எதிர்காலம் குறித்து அவநம்பிக்கையும், சந்தேகமும் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உருவாகியுள்ளன என்பதும் நிராகரிக்க முடியாதவையாகவே உள்ளன. ஆகையினால், வெளிநாடுகளில் சமாதான நடவடிக்கைகள் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதொன்றே. அவ்வாறு ஏற்படுத்தும் பட்சத்திலேயே சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கும் வெளிநாட்டு உதவிகளும், முதலீடுகளும் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆனால், பேச்சளவில் மட்டும் நம்பிக்கையைக் கொடுத்தல் சிறிது காலத்திற்கு மட்டுமே சாத்தியப்பாடானதாகும். நடைமுறையில் சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தினால் மட்டுமே நீண்ட காலத்திற்கு அரசினால், பயன்பெற முடியும்.

# இஸ்ரேலிய ஆயுதக் கொள்வனவில் ஊழல்; கண்டறிய அமைச்சரவையில் ஆராய்வு!

சிறிலங்காக் கடற்படைக்கு இஸ்ரேலிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததில் ஊழல் இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து நேற்று அமைச்சரவை உபகுழு கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, கடற்படைத் தளபதி தயாசந்தகிரி, அமைச்சர் ராஜித சேனாரட்ண, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆயுதக் கொள்வனவில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இதனையடுத்து வரவு-செலவுத் திட்ட மற்றும் கேள்வி மனுக்களுக்கான அமைச்சரவை உப குழுவைக் கூட்டி இந்த விடயத்தை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

சிறிலங்கா கடற்படைக்கு இஸ்ரேலிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்களில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் உள்ளனவா என்பதைக் கண்டறியுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சு.க.-ஜே.வி.பி. கூட்டமைப்புக் குறித்து பேச்சுக்கள் இனிமேல் இடம்பெறாது

## பொ.ஐ.மு.செயலாளர் அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் ஏற்படுத்தப்படவுள்ள கூட்டமைப்பு தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்போவதில்லையென பொ.ஐ. முன்னணியின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே ஏற்படுத்தப்படவுள்ளதால் அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த பொ.ஐ. முன்னணிக்கு அவசியம் இல்லையென இக்கட்சியில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் இக்கட்சிகளின் தலைவர்களுடன் சனாதிபதி உத்தேச கூட்டமைப்புத் தொடர்பாக அடிக்கடி பேச்சுவார்த்தை நடாத்துவாரென அவர் மேலும் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இக்கூட்டமைப்பு தொடர்பாக இன்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.


# விசாரணைக்கு அழைத்துச் சென்ற பெண்கள் மீது பொலிசார் வல்லுறவு

(கொழும்பு)

கொழும்பு-பம்பலப்பிட்டியைச் சேர்ந்த இரண்டு பெண்களை விசாரணைக்கென அழைத்துச் சென்ற பொலிசார் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கியுள்ளார்கள்.சபுகஸ்கந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிசாரும் அவர்களது நண்பர்கள் ஆறு பேரும் குறிப்பிட்ட இரு பெண்களையும் கடந்த 18ஆம் திகதி விசாரணைக்கென அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த இரண்டு பொலிசாரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு இவர்களது நண்பர்களான ஆறு பேரையும் பொலிசார் தேடி வருவதாக களனி பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.இவர்கள் இருவரையும் பொலிஸ் சேவையிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மரப்பால புனரமைப்பு ஆரம்பம்



(அலுவலக செய்தியாளர்)

கிளி. கோணாவில் கந்தரம் மரப்பாலம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக பாரிய இயந்திரத் தின் துணைகொண்டு தற்போது நீர் அணைக்கட்டு அமைக்கப்பட்டு வருகின்றது.

நிக்கொட் நிறுவனத்தினின் வேலைத்திட்டத்தின் கீழ் இவ் மரப்பாலப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி மரப்பாலம் பல மாதகாலமாக பழுதடைந்த நிலையில் இருந்து வருவதும் இப்பாலத்தின் மேலாக பெரும் சிரமத்திற்கு மத்தியில் பாவுர்திகள் பயணித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் சனாதிபதியின் திட்டம் தமிழர்கள் மீதான போர்ப் பிரகடனமே

## - கூட்டமைப்பு பா.உ. சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கையும் கிழக்கையும் இரண்டாகக் கூறுபோட முனையும் சந்திரிகாவின் திட்டத்தை தமிழர்கள் தமக்கெதிரான போர்ப்பிரகடனமாகவே கருதுகின்றனர் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தியாகி திலீபன் நினைவுத்தூபி புனரமைப்பு திரை நீக்க நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு கிழக்கைப் பிரிக்கும் முயற்சியில் சனாதிபதியும், இனத்துவேசக்கட்சிகளான ஜே.வி.பி.யும் மற்றும் சிஹல உறுமயக் கட்சிகளும் இணைந்து செயற்பட்டு வெற்றியடையுமானால் தமிழர்கள் தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் ஒன்றுபட்டு தமக்கெனத் தனித் தமிழீழம் அமைக்கும் தமிழர்களின் திட்டத்தில் எந்தவிதமான கருத்து முரண்பாடும் இல்லை.

ஜெயசிக்குறு முறியடிப்பு வெற்றிச்சமர் மற்றும் ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று போன்ற வெற்றிச்சமர்கள் மூலம் அடிவாங்கிய சிறிலங்கா அரசு எதுவும் செய்யமுடியாத நிலையிலேயே சமாதானப் பாதைக்குத் திரும்பியது.

இது சிங்கள தேசத்துக்கான இறுதிச் சந்தர்ப்பம். தவறிவிடுமாக இருந்தால் தமிழர்கள் தமக்கெனத் தனித்தமிழீழம் அமைப்பதை சிங்கள தேசம் பார்த்து வருந்தப்பட வேண்டி வரும். இடைக்கால நிர்வாகத் திட்ட மூடாக தமிழர்களின் புனர்வாழ்வுக்காக விடுதலைப்புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்று நியாயமான முறையில் சிங்கள தேசம் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (33)

# கைக்குண்டுகள் வைத்திருந்த மாகாணசபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

சப்ரகமுக மாகாணசபை உறுப்பினர் ஒருவரை கேகாலை பொலிசார் கைது செய்துள்ளனர். இந்த அரசியல்வாதியுடன் மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் அலுவலகத்தில் இரண்டு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்னி இராணுவத்தளபதியின் செயலுக்கு பொங்குதமிழ் ஏற்பாட்டாளர் கண்டனம்

## - மனித உரிமை மீறல் என முறையீடு

(லண்டன்)

அடுத்தமாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டுக் கூட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் கலந்து கொண்டதற்கு விளக்கமளிக்குமாறு கோரி வன்னிப்பிராந்திய இராணுவத் தளபதியினால் வவுனியா அரசாங்க அதிபருக்கும் வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பொங்கு தமிழ்ஏற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஏற்பாட்டாளர்குழு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளது. விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமையே அரச ஊழியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இதற்கு இராணுவ அதிகாரி விளக்கம் கேட்பது மனித உரிமை மீறலாகும். இதனால் இராணுவத்தின் இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் இராணுவத்தளபதியால் அனுப்பப்பட்ட கடிதத்தினை மீளப் பெறுவதற்கும் கண்காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர் குழு கண்காணிப்புக்குழுவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பொங்குதமிழ் நிகழ்வு விடுதலைப்புலிகளால் நடாத்தப்படும் அரசியல் நடவடிக்கை என்றும் இதற்கான ஏற்பாட்டுக்கூட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் என்றரீதியிலேயே வவுனியாவைச் சேர்ந்த சில பாடசாலை அதிபர்கள், சில கிராம சேவை அலுவலர்களும் கலந்துகொண்டார்கள் என்றும் இது இப்பிரதேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் இதுபற்றி விளக்கம் கேட்பதற்கு தமக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவத்தளபதியால் விளக்கம் கேட்டு எழுதப்பட்ட கடிதம் தொடர்பாக தான் எத்தகைய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து மாகாண சபையின் உள்ளூராட்சிசபைகளுக்கான அமைச்சர் அலித்அலுவிகாரவிடம் ஆலோசனை கேட்டு வவுனியா அரசாங்க அதிபர் கணேஸ் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பொங்குதமிழ் நிகழ்ச்சி ஒரு கலாச்சார நிகழ்ச்சி என்றும் சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவே நடத்தப்படுவதாகவும் பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் தமக்குத் தெரிவித்திருப்பதாக அக்கடிதத்தில் அரசாங்க அதிபர் கணேஸ் குறிப்பிட்டுள்ளார்.

# கிளி.யில் பண்டார வன்னியனின் 200 ஆவது ஆண்டு நினைவு நாள்!

மாவீரன் பண்டாரவன்னியனின் 200 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றுள்ளது.

வித்தியாலய முதல்வர் யோகராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மாணவரமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த பண்டாரவன்னியனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் வன்னியன் ஏற்றிவைத்தார். பண்டாரவன்னியனின் சிலைக்கு மலர்மாலையினை கிளிநொச்சி மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி அணிவித்தார். தொடர்ந்து உரைகளை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் அவர்களும், வன்னி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானமும் நிகழ்த்தினர்.

# ஆ.அ.வங்கி அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## - அபிவிருத்தித் திட்டம் குறித்து ஆராய்வு

யாழ். மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்கப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் அதிகாரிகள் குழு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சென்றுள்ளது. இந்தக் குழுவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவத் திட்டமிடல் நிறைவேற்று அதிகாரியும், சக்திவள அதிகாரியும் இக்குழுவில் அடங்கியிருக்கின்றனர்.

இக்குழுவினர் யாழ்.செயலகத்தில் யாழ். அரச அதிபர் தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடவுள்ளனர்.

# யாழ்.மாவட்ட வைத்தியசாலை ஊழியர் திடீர் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

## சேவைகள் பாதிப்பு, நோயாளர் அவதி

யாழ். மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களும் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்ததால் நேற்றைய தினம் வைத்தியசாலையின் நிர்வாகம் குழப்பமடைந்ததுடன், வைத்திய சேவைகள் இடம்பெறாததால் பெருமளவான மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இவர்களின் இந்தத் திடீர் வேலை நிறுத்தத்தினால் வைத்தியசாலையின் உள்ளக நோயாளர் பிரிவு, வெளியக நோயாளர் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட சகல பிரிவுகளும் இயங்க முடியாதிருந்ததையும், வைத்தியசாலைக்கு வந்த மக்கள் வீடு திரும்பியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (33)

# தமிழருக்கான நிர்வாக அலகுகள் எதுவாகிலும் விடுதலைப்புலிகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்

## -பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான நிர்வாக அலகுகள் எதுவானாலும் அது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளிடமே வழங்கப்பட வேண்டுமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

சமகால அரசியல் நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்த வரையும் விடுதலைப்புலிகளையே தமிழ் பேசும் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஏனெனில் தமிழ்மக்களின் அபிலாசைகளையும், வாழ்வுரிமைகளையும் பெற்றுக் கொடுக்கக் கூடிய பலம் பொருந்திய அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளே காணப்படுகின்றனர். இப்படியான விடுதலைப்புலிகளின் கையிலேயே நமக்குரிய ஆளுமை ஒப்படைக்கப்பட வேண்டுமென்பது அவர்களது அபிலாசை. ஆனால் இப்படியான தமிழீழ விடுதலைப்புலிகளின் கையில் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை வழங்குகின்ற விடயத்தில் ஈ.பி.டி.பி.யினர் செய்யும் சில குழப்பகரமான வேலைகளும் என்றுமே எமது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஏனெனில் இனவாத அரசுக்கு கூலிப்படைகளாகவும், எடுபிடிகளாகவும் சுயலாபம் கருதி அரசியல் நடத்தும் இவர்களை என்றுமே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (33)

### கூட்டமைப்பு...

இருக்கின்றார். அலரிமாளிகையில் இன்று மாலை 3.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது. இச்சந்திப்பு தொடர்பான அறிக்கை தமிழ்க்கூட்டமைப்பினால் செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்படும் எனவும் தெரிய வருகின்றது. (25)

### இஸ்ரே...

லிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது பெரும் நட்டம் என்றும் அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதிலேயே நன்மைகள் உண்டு என்றும் கூறியதையடுத்து இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்வதைத் தவிர்ப்பது என்றும் இதற்கான கேள்விப்பத்திரங்களை புதிதாகக் கோருவதென்றும் இம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

### சுமார்...

நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. மொத்தம் நாற்பத்தொன்றே கால் பவுண்நிறையுடைய ஏழு தாலிக் கொடிகளும், மொத்தம் 45 பவுண் நிறையுடைய 12 சங்கிலிகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன. நேற்றுக்காலை எட்டு மணி தொடக்கம் 11.30மணிவரையான நேரத்துக்குள்ளேயே இந்தக் களவுகள் இடம்பெற்றுள்ளது.இந்தக் கொள்ளையுடன் தொடர்புடைய மூவரை மக்கள் மடக்கிப் பிடித்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த மூவரும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இதில் மூவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (33)

### யாழ்...

குடும்பங்கள் ஒப்பந்தத்திற்கு முன்னர் மீளக்குடியமர்ந்துள்ளனர். உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக 57 கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமரமுடியாதுள்ளனர். இக்கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தமது தொழில்களையும் இழந்துள்ளனர். யாழ்.குடாநாட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் புனரமைப்புப் பணிகளுக்கென ஆறாயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டபோதும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையில் எத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றங்களும் நிகழவில்லை.

மீளக் குடியமர்ந்த 45 ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபாவும் வீட்டுக்கான நன்கொடையாக 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுமென அரசு அறிவித்திருந்த போதிலும் கூட இதுவரை ஆறாயிரம் குடும்பங்களுக்கு, மட்டுமே 25ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட 95 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசாங்கமோ அரசுசாரா நிறுவனங்களோ, எத்தகைய உதவிகளையும் வழங்கவில்லை என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டுக்கான நன்கொடையாக 75 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுமென, அரசு அறிவித்திருந்த போதிலும் கூட இதுவரை ஆறாயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே 25ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பாதிக்கப்பட்ட 95 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசாங்கமோ அரசுசாரா நிறுவனங்களோ எத்தகைய உதவிகளையும் வழங்கவில்லை என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேஜர்...

உட்பட பலரும் உரை நிகழ்த்தினர். மட்டு அம்பாறை மகளிர் தளபதி செல்வி நிலாவினி ஈகச்சுடர் ஏற்றினர். மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் பிரதான கல்லறைக்கு மலர்மாலை அணிவித்தார். தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் அகவணக்கம் செலுத்தினர்.

### எரிக்...

உறுப்பினர்களும் நேற்றுக்காலை பிரான்சிற்குச் சென்றுள்ளனர்.

கனேடிய சமஷ்டிப் பேரவையின் தலைவர் கொப்றே, பேரவையைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட்கமரோன் ஆகியோரே நேற்றுக்காலை புலிகளின் உள்ளகக்கூட்டத்தில் இணைந்துகொண்டு சமஷ்டி தொடர்பாக தமது ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இது இப்படியிருக்க பிரான்சிற்கான நேரவேறுபாடு, பாரிசில் ஆலோசனைக்கூட்டத்தை மேற்கொண்டு வரும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோரை நேற்று மாலை சந்தித்துப் பேசத்திட்டமிட்டிருந்தார் விடுதலைப்புலிகள் உலக நாடுகளின் சட்டவல்லுனர்களை ஒன்றுகூட்டி நடத்திவரும் இக்கூட்டத்தின் முடிவில் தயாரிக்கப்படும் பதில் வரைவு புலிகளின் தலைமைப்பீடத் திடம் கையளிக்கப்பட்டு பாரிசிலனையின் பின் அரசிற்கு வழங்கப்பட இருகிறது.

### மலேசியா...

வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான ஒப்பந்தத்திலும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க கையொப்பமிட இருக்கின்றார்.

# கல்விமாணிப்பட்டக் கற்கைநெறிக்கு தனிச்சிங்களத்தில் விண்ணப்பங்கள்

கல்விமாணிப்பட்ட விண்ணப்பங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவகத்தால் கடந்த வருடத்திலிருந்து தொலைக் கல்வி மூலம் கல்விமாணிப்பட்ட கற்கைநெறி வகுப்புக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன. 2004-2006 கல்வி ஆண்டுக்கான விண்ணப்பங்கள், விண்ணப்பதாரிகளுக்கு தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன. தமிழ்மொழி மூலம் கற்கைநெறி வகுப்புக்கள் நடாத்தப்படும் நிலையில், விண்ணப்பப்படிவங்கள் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளமையால் விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தேசிய கல்வி நிறுவகத்திலுள்ள தமிழ் மொழிப்பிரிவுக்கென தமிழ் அதிகாரி ஒருவர் இருந்தும் அப்பிரிவு இவ் விடயத்தில் அசிரத்தையுடன் நடந்து கொண்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சாவு அறிவித்தல்

### கந்தையா-கதிர்காமநாதன்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 8ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிர்காமநாதன் 25 – 08 – 2003 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் (ஆறுமுகம்), – சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சோமசுந்தரிப்பிள்ளையின் அன்புக் கணவரும், இரவீந்திரன், நிர்மலாதேவி,காலஞ் சென்றவர்களான அகிலா, அகிலாதேவி, விஜேந்திரன்,றஜீந்திரன்,பகீந்திரன், சுஜீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன்ராஜ்,கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கண்ணையாவின் அருமைச் சகோதரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 27 – 08 – 2003 இன்று காலை 11.00 மணிக்கு இராமநாதபுரம் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**469,6ஆம் யூனிற்,**
**இராமநாதபுரம்,வட்டக்கச்சி,**
**கிளிநொச்சி.**

(3675)

**தகவல்:**
**(மகன்) ரகு**

## சாவு அறிவித்தல்

### மாரிமுத்து இராசரத்தினம்

*சங்கானையைப் பிறப்பிடமாகவும் 589. ஸ்கந்தபுரத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசரத்தினம் 24–08–2003 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பகவதி அம்மாவின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28–08–2003 நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லமான சேச்றோட், சங்கானையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.*

தகவல்:-
குணரத்தினம்(மகன்).
முருகனருள் புடவை வாணிபம்,
(சண்முகானந்த புடவை வாணிபம்.
கந்தபுரம்.

(3674)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.